3rd March 1958]

* 177 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the action taken so far on the recommendation of the Special Officer appointed for enquiring into the conditions of the repatriates in this State ; and

(*b*) whether the Government will place a copy of the report on the table of the House?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The attention of the hon. Member is invited to the answer to starred question No. 176 put by Sri N. K. Palaniswami, M.L.A.

* 178 *Q.*—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the recent repatriates from Ceylon have made certain representations to the Government; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Almost all the representations are covered by the various measures for rehabilitation suggested by the Special Officer which are still under examination. In the few other cases, replies have been sent giving advice as to the proper procedure to be followed.

SRI N. K. PALANISAMI : ஸ்பெஷல் ஆபீசர் ஏதோ சிபாரிசுகள் செய்திருப்பதாக மந்திரி அவர்கள் சொன்னார்கள். அந்த சிபாரிசுகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த ரிப்போர்ட் அச்சில் இருக்கிறது. மிகவும் பெரியதாக இருக்கிறது. அச்சிலிருந்து வந்ததும் அதை இங்கே சமர்ப்பிக்கிறேன்.

SRI A. VEDARATHNAM : இலங்கையிலிருந்து திரும்பி வந்தவர்கள் தொழில் நடத்துவதற்காக "பஸ் பெர்மிட்" கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதிலே இருக்கிற சட்ட நிலைமையையும் பரிசீலிக்கவேண்டும்., அவ்வாறு கோரிக்கை இருக்கிறது. இதுவும் இப்பொழுது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

SRI M. S. SELVARAJAN : பரிசீலனை முடிவதற்கு முன்பு, ஏற்கெனவே அவர்களுக்குக் கொடுத்து வந்த வர்த்தகச் சலுகையை நிறுத்தியிருப்பதை மறுபடியும் புதுப்பிக்க முடியுமா ? இலங்கையிலிருந்து வந்தவர்கள் என்று உறுதியாகத் தெரியும் பட்சத்தில், தொழில் ஆரம்ப கட்டத்தில் குறிப்பிட்ட சில வருஷங்களுக்காவது அவர்களுக்கு சலுகை கொடுக்கப்படுமா ? யாரோ சிலர் தவறு செய்ததற்காக எல்லோரையும் தண்டிப்பது பொருத்தமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பு செய்யப்பட்ட தவறு மட்டுமல்ல. இப்பொழுதும் ஒரு சிலருக்கு சலுகை அளித்தால், அந்தச் சலுகையை வேறு யாராவது துஷ்பிரயோகம் செய்வார்களா என்று கவனிக்கவேண்டியிருக்கிறது. இவைகளையெல்லாம் அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலனை செயயவேண்டியிருக்கிறது.

SRI S. NAGARAJA MONIGAR : இலங்கையிலிருந்து தமிழர்களை 1-20
திருப்பி அனுப்பப்படுவது தேசீய தமிழர்கள், தனித் தமிழ் நாடு p.m,
என்றெல்லாம் சொல்வது போன்று அல்லது மற்றவர்கள் நம்மை இங்கு வந்து சுரண்டுவது போன்று இங்கிருந்து இலங்கைக்குச் சென்றவர்கள்

[3rd March 1958

அங்கிருந்து சுரண்டிக்கொண்டு இங்கு வருவதற்கு சென்றவர்களா என்பதை அறிய விரும்புகிறேன். இப்படியானால் அப்படிச் சென்றவர்கள் எத்தனை பேர்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்படிப்பட்ட பிரச்னையில் கனம் அங்கத்தினர் தீவிரமாக சிந்தனை செய்து கொண்டிருப்பதாகச் தெரிகிறது. இதை பற்றிய அபிப்பிராயம் அவரே வைத்துக்கொள்ளலாம்.

SRI M. P. SUBRAMANIAM : இது சம்பந்தமாக அகதிகளைக் காப்பாற்றுவதற்கு என்று அரசாங்கம் அதிகாரிகளை நியமித்திருப்பதாக தெரிகிறது. அதைப்போலவே பக்கத்தில் சிலோனிலிருந்து வரக்கூடிய அகதி மக்கள் எத்தனை பேர்கள் நம்முடைய துணையை நாடிக்கொண்டு வருகிறார்கள் ? அப்படி வருகின்றவர்கள் எத்தனை பேர்கள் நம்மிடமிருந்து பலனை எதிர் பார்க்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி இப்பொழுது என்னிடத்தில் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI S. B. ADITYAN : இலங்கையிலிருந்து தமிழ் நாட்டிற்கு வரக் கூடிய தமிழ் அகதிகளுக்கு இங்கு வசதி செய்து கொடுக்காத காரணமாக அவர்கள் மீண்டும் கள்ளத்தனமாக கள்ளத் தோணிகளில் இலங்கைக்குச் செல்வதால் அவர்களைச் சுட்டுக் கொல்லும்படியான நிலைமை ஏற்பட்டிருக் கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் கேட்கக் கூடியகேள்வி எதிர் கட்சியிலிருந்து கொண்டு கேட்கக்கூடிய ரீதியில் இருக்கிறது. அப்படி எதிர் கட்சியில் இருந்துகொண்டு இப்படிப்பட்ட பெரிய புகார்களை புகாருக்காகச் சொல்வதாக இருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. அதைப்பற்றி அவ்வளவு சொல்லாமலேயே இருக்கலாம்.

SRI A. V. P. ASAITHAMBI : பாகிஸ்தானிலிருந்து இங்கு வந்தவர்களுக்கு இந்திய சர்க்கார் தனிச்சலுகைகள் கொடுப்பதைப்போன்று இலங்கையிலிருந்து வரக்கூடிய அகதிகளுக்கும் அப்படிப்பட்ட சலுகைகளைக் கொடுக்க இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்யுமா ? இலங்கையும் பிற நாடு என்று கருதி அங்கிருந்து வரக்கூடியவர்களுக்கும் அப்படிப்பட்ட சலுகைகளைக் கொடுக்க முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இலங்கையிலிருந்து வரக் கூடியவர்களுடைய நிலைமை வேறு பாகிஸ்தானிலிருந்து வரக்கூடியவர்களுடைய நிலைமை வேறு. அதனால் இந்தப் பிரச்னை சம்பந்தமாக அனாவசியமாக சிக்கல்களை ஏற்படுத்த வேண்டாம் என்பதை மட்டும் சொல்லிக்கொள்ளுகிறேன். இலங்கையிருந்து வரக்கூடியவர்களுக்கும் என்ன என்ன சலுகைகள் காட்ட முடியுமோ அவ்வளவையும் காட்டுவதற்கு இந்த அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது.

SRI K. VINAYAKAM : Sir, what is the total number of persons so repatriated from Ceylon to our country and with regard to rehabilitation, what are the steps that the Government have taken in the field of agriculture, industry, commerce and in matters of employment in Government service?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I think I have given this information some time back about the total number of people who have come. Regard proposals for rehabilitation, that is exactly what we have been considering just now in these few minutes by questions and answers.

3rd March 1958]

Sri K. PERIANNAN : இலங்கை இந்தியா பிரச்னையால் பெரும் பாலும் பாதிக்கப்பட்டவர்கள் பிற்பட்ட இனத்தவர்களும், தாழ்த்தப் பட்ட இனத்தவர்களும்தான். அங்கிருந்து இங்கு வந்தவர்களில் பெரும் பாலும் அங்கு திரும்பிப்போக முடியாமல் இருக்கிறார்கள். அதனால் அவர் களுக்கு இந்த அரசாங்கம் ஏதாகிலும் உதவி செய்ய முன் வருவார்களா ? மேலும் ஒரு குழுவை அமைத்து அதன் மூலம் அந்த அரசாங்கத்துடன் கலந்து இப்படிப்பட்டவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இது வேறு விஷயம். இதைப்பற்றி தனியாக கேள்விபோட்டால் இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கின்றன என்பதைப்பற்றி பதில் சொல்லலாம்.

Sri A. V. P. ASAITHAMBI : இலங்கையில் இருக்கிற தமிழர்கள் இந்தி யாவுடன் இணைய சம்மதித்திருக்கிறார்களா ? அதைப்பற்றிய பேச்சு அடிக்கடி கேட்கப்படுகிறதே, அதைப்பற்றிய தகவல் இந்த அரசாங்கத்திற்கு உண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்தக் கேள்வியை அவர் கேட்பது சரியல்ல என்பதை நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளு கிறேன். அனாவசியமாக விவகாரங்களில் தலையிட்டு சர்ச்சைக்கு எடுத்துக் கொள்வது சரியல்ல.

Mr. SPEAKER : இலங்கையைப்பற்றி இவ்வளவு கேட்பது சரியல்ல என்று எனக்குத் தோன்றுகிறது.

Sri N. R. THIAGARAJAN : நான் சென்ற ஆண்டுதான் இலங்கை யிலிருந்து அகதியாக வந்திருக்கிறேன். பாகிஸ்தானிலிருந்து வந்த அகதி களைக் காப்பாற்றுவது போல் என்னையும் காப்பாற்றி அவர்களுக்குக் கொடுக்கப்படும் வசதியைப்போன்று எனக்கும் கொடுப்பார்களா என் பதை அறிய விரும்புகிறேன்.

Mr. SPEAKER : இலங்கையிலிருந்து வந்தவர்களைப்பற்றி கேள்வி இருக்கும்போது பாகிஸ்தானைப்பற்றி கேள்வி கேட்பது சரியல்ல.

Sri A. VEDARATHNAM : இலங்கையிலிருந்து வந்த அகதிகள் வேலையின்றி மிகக் கஷ்டமான நிலையில் இருப்பதால் அவர்களை இங்கு தொழிற் துறையில் ஈடுபடுத்தி அவர்களுடைய கோரிக்கைகளை காலங் கடத்தாமல் ஆலோசனை செய்து விரைவில் ஓர் முடிவுக்கு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : காலம் ஆகிறது என்று சொல்வதற்கு கொஞ்சம் கூட இடம் இல்லை. எந்த எந்த துறையில் அவர்களை ஈடுபடுத்தமுடியுமோ அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதில் இந்த அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. ரிப்போர்ட் வந்தபிறகு இந்த அரசாங்கம் முடிவு செய்யும் என்பதை கனம் அங்கத்தினருக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Tirupathi Devasthanam High School, Vellore

* 179 *Q.*—**Sri P. U. SHANMUGAM** : Will the Hon. the Minister for Finance be pleased to state why the teachers of the Tirupathi Devasthanam High School, Vellore, are not paid the new enhanced dearness allowance?

The Hon. Sri C. SUBRAMANIAM : Instructions are being issued by the Director of Public Instruction to the management of the school to pay the enhanced dearness allowance to the teachers in the school.